2 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி

**அ.வ.எண்.333/2025**

திருமதி.லதாபாய் ... வாதி

//எதிர்//

1) S.ரெத்னா பாய்
2) செல்வின் லீலாபாய்
3) செல்வின் ஜீவராஜ்
4) வட்டாட்சியர்
பாளையங்கோட்டை
5) தமிழக அரசு அதன்
மாவட்ட ஆட்சித் தலைவர், திருநெல்வேலி

... பிரதிவாதிகள்

**நீதிமன்ற முத்திரைக் கட்டணத்திற்கான பரிகாரம் அல்லது சொத்தின் விபரம்**

| சட்டப் பிரிவும் உட் பிரிவும் | வழக்கின தன்மை | சொத்தின் வருடாந்திர தீர்வை அல்லது குத்தகை | பிராது பரிகாரத்தின் மதிப்பு அல்லது சொத்தின் கடை விலை | நீதிமன்ற முத்திரைக் கட்டண மதிப்பு |
|---|---|---|---|---|
| 25(டி) | விளம்புகை பரிகாரம் | -- | ரூ.5,000/- | ரூ.150.00 |
| 27(சி) | செயலுறுத்து கட்டளை பரிகாரம் | -- | ரூ.1,000/- | ரூ.30.00 |

// உத்தரவுப்படி //

தலைமை எழுத்தர்

**2 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

**முன்னிலை : திருமதி. ஆர்.எல். பிரியதர்ஷினி, பி.ஏ., பி.எல்.,**

**2 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**

**திருநெல்வேலி**

2026 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 06 ம் நாள் திங்கள்கிழமை

**அ.வ.எண்.333/2025**

திருநெல்வேலி , பாளையங்கோட்டை , மகாராஜன் நகர், தியாகராஜன் நகர், 15–வது தெற்கு தெரு, க.எண்.641 ஏ–ல் வசித்து வரும் விஜயகுமார் அவர்கள் மனைவி வயது 58 உள்ள திருமதி.லதாபாய்.

...வாதி

//எதிர்//

1) கன்னியாகுமரி, கல்படி, வேளிமலை, மூங்கில்விளை, அன்னை தெரு, அன்னை இல்லம், க.எண்.9/134/1 என்ற முகவரியில் வசித்து வரும் செல்வமணி அவர்களின் மனைவி வயது 81 உள்ள ரெத்னாபாய்.

2) திருநெல்வேலி, கீழநத்தம், கே.டி.சி நகர் வடக்கு, பாரதி நகர் 4, க.எண் 131 என்ற முகவரியில் வசித்து வரும் செல்வமணி அவர்களின் குமாரத்தி வயது 59 உள்ள செல்வின் லீலாபாய்.

3) திருநெல்வேலி, பாளையங்கோட்டை, பெருமாள்புரம், செயிண்ட் மேரிஸ் தெரு, க.எண் 56A/1B என்ற முகவரியில் வசித்து வரும் செல்வமணி அவர்களின் குமாரர் வயது 58 உள்ள செல்வின் ஜீவராஜ்.

4) திருநெல்வேலி, கொக்கிரகுளம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகத்தில் இருக்கும் பாளையங்கோட்டை வட்டாட்சியர் அலுவலகம் அதன் வட்டாட்சியர்.

5) திருநெல்வேலி, கொக்கிரகுளம், மாவட்ட ஆடசித்தலைவர் அலுவலகத்தில் இருக்கும் திருநெல்வேலி தமிழக அரசு அதன் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள்.

... பிரதிவாதிகள்

இவ்வழக்கானது, வாதியின் ஆவணப்பெயரான லதாபாய் என்ற நபரும் உயிலில் கண்ட வாதியின் பெயராக காட்டியுள்ள செல்வின் லதாபாய் என்ற நபரும் ஒரு நபரே என விளம்புகை பரிகாரம் வழங்கும் படியும் மற்றும் வாதியின் ஆவணப் பெயரான லதாபாய் என்ற நபரும் உயிலில் கண்ட செல்வின் லதாபாய் என்ற நபரும் ஒரு நபரே என 4ம் பிரதிவாதி சான்று வழங்கிட செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கும் படியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| வழக்கு தாக்கல் செய்த நாள் | – | 15.09.2025, |
| வழக்குமூலம் | – | 28.03.2012, 23.06.2023, 05.12.2024, 17.07.2025, 20.08.2025, 21.08.2025 ஆகிய தேதிகளில் திருநெல்வேலியில் வைத்து உற்பத்தி. |
| பிராது மதிப்பு | – | ரூ.5,000/– + ரூ.1,000/– |

வாதி தாவாவை அதிகார வரம்பிற்காகவும், நீதிமன்ற முத்திரை கட்டணத்திற்காகவும், அ) பரிகாரத்திற்காக ரூ.5,000/–ஆக மதிப்பீடு செய்து அதற்கான நீதிமன்ற முத்திரைக் கட்டண சட்டப்பிரிவு 25(d)–ன் படி ரூ.150/–ம் ஆ) பரிகாரத்திற்காக ரூ.1,000/–ஆக மதிப்பீடு செய்து அதற்கான நீதிமன்ற முத்திரைக் கட்டண சட்டப்பிரிவு 27(C)–ன் படி ரூ.30/–ம் ஆக மொத்தம் ரூ.180/– நீதிமன்ற முத்திரை கட்டணமாக செலுத்தப்பட்டுள்ளது.

இவ்வழக்கு 15.09.2025ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 25.03.2026 அன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.ஜாகீர்உசேன் அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.நாகராஜன் அவர்கள் முன்னிலையாகியும், 4, 5 பிரதிவாதிகள் தரப்பில் அரசு தரப்பு வழக்கறிஞர் திரு.R.சங்கர் அவர்கள் முன்னிலையாகியும் இருதரப்பு வாதங்களை கேட்டறிந்தும், வழக்கு ஆவணங்களையும் ஆராய்ந்து இன்று இந்நீதிமன்றம் கட்டளையிட்டு வழங்கும்...

## தீர்ப்பாணை

i) வாதியின் வழக்கு பகுதியாக அனுமதிக்கப்படுகிறது.

ii) வாதியின் ஆவணப்பெயரான லதாபாய் என்ற நபரும் வா.சா.ஆ 3 உயிலில் கண்ட வாதியின் பெயராக காட்டியுள்ள செல்வின் லதாபாய் என்ற நபரும் ஒரு நபரே என விளம்புகை செய்யப்படுகிறது.

Iii) வாதி கோரிய செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று தள்ளுபடி செய்யப்படுகிறது.

iv) செலவுத்தொகை இல்லை.

## செலவு விவரப் பட்டியல்

(இரு தரப்பிலும் செலவுத்தொகை பட்டியல் தாக்கல் இல்லை)

PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL

Digitally signed by PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL
Date: 2026.04.17 11:35:40 +0530

2 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருநெல்வேலி

2 வது கூடுதல் மாவட்ட
உரிமையியல் நீதிமன்றம்,
திருநெல்வேலி

அ.வ.எண்.333/2025

தீர்ப்பாணை

06.04.2026